சென்னை மணவழகர் மன்றம் முத்தமிழ் விழா அறக்கட்டளை நடத்தும்

# மணவழகர் மன்றத்தின் 70 ஆம் ஆண்டு முத்தமிழ் விழா!

## தலைமை: மா.சுப்பிரமணியன் – முன்னிலை: அரு.இல.சுந்தரேசன்!

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி சிறப்புரை!

சென்னை, ஜூலை 7 - அண்ணாமலை பல்கலைக்கழகத்தின் முன்னாள் இணை வேந்தர் டாக்டர் எம்.ஏ.எம்.ராமசாமி அவர்களின் பேருதவியைக் கொண்டு இயங்கி வரும் மணவழகர் மன்றம் முத்தமிழ் விழா அறக்கட்டளை நடத்தும் மணவழகர் மன்றத்தின் 70 ஆம் ஆண்டு முத்தமிழ் விழா 10.7.2026 வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணி அளவில் சென்னை தியாகராயர் நகர் ஜி.என்.செட்டி ரோடு, சர்.பி.டி. தியாகராயர் கலையரங்கத்தில் நடைபெறுகிறது என மணவழகர் மன்றத்தின் செயலாளர் கே.கன்னியப்பன் தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்ச்சிக்கு மணவழகர் மன்றச் செயலாளர் கே.கன்னியப்பன் வரவேற்புரை ஆற்றுகிறார்.

இவ்விழாவிற்கு சென்னை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் - முன்னாள் அமைச்சர் மா.சுப்பிரமணியன் தலைமை வகிக்கிறார்.

மூத்த வழக்கறிஞர் அரு. இல.சுந்தரேசன் முன்னிலை வகிக்கிறார்.

விழாவில் திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி தந்தை பெரியாரும் தமிழ் தென்றல் திரு.வி.க.வும் எனும் தலைப்பில் உரையாற்றுகிறார்.

மேலும் பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்கள் பங்கேற்று பல்வேறு தலைப்புகளில் உரையாற்றுகின்றனர்.

நிறைவாக மணவழகர் மன்றத்தின் துணைச் செயலாளர் சு.கருணாநிதி நன்றி கூறுகிறார்.

கோவை மின்வாரியத்தில் பதவி உயர்வு பெற்ற

# அதிகாரிகள் பணியிட மாறுதலில் அமைச்சர் தலையீடு!

## பாதிக்கப்பட்ட பணியாளர்கள் குற்றச்சாட்டு!

கோவை, ஜூலை 7 - கோவை மின்வாரியத்தில் பதவி உயர்வு பெற்ற அதிகாரிகள் பணியிட மாறுதல் விவகாரத்தில் மாவட்டப் பொறுப்பு அமைச்சர் சம்பத்குமாரின் தலையீடு இருப்பதாகவும், அவரது சிபாரிசின் பேரில் சில ஊழியர்கள் பணியிட மாறுதல் செய்யாமல் அதே அலுவலகத்தில் பணியாற்றி வருவதாகவும் பாதிக்கப்பட்ட மின் பணியாளர்கள் குற்றம்சாட்டி உள்ளனர்.

கோவை மின் மண்டலம் உள்பட அனைத்து மண்டலத்திற்கு உட்பட்ட அலுவலகத்தில் பதவி உயர்வு பெற்றவர்கள் பணியிட மாறுதல் மற்றும் விருப்ப இடமாறுதல் பெற்றவர்களுக்கு ஒதுக்கப்பட்ட பணியிடத்தில் பணியில் சேர வேண்டும் என உத்தரவிடப்பட்டது. தற்காலிக பணியிட மாறுதல் பெற்றவர்களும் உடனடியாக பணி விடுவிப்பு செய்து அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட அலுவலகத்தில் உடனடியாக பணியில் சேர வேண்டும் என சென்னை மின் வாரிய தலைமைப்பொறியாளர் அனைத்து மண்டல தலைமைப் பொறியாளர், மேற்பார்வை பொறியாளருக்கு உத்தரவிட்டிருந்தார்.

### விதிகளை மீறி செயல்படுகின்றனர்!

ஆனால், கோவை மண்டலத்தில் குறிப்பிட்ட சில பணியாளர்களை மட்டும் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் சேர நிர்பந்தம் செய்யப்பட்டு இருப்பதாக புகார் எழுந்துள்ளது. தவிர, பதவி உயர்வு பெற்ற மற்றும் பணியிட மாறுதல் பெற்ற அலுவலர்களை மட்டும் விடுவிப்பு செய்யாமல் அதே அலுவலகத்தில் தற்காலிகப் பணியிட மாறுதல் என்ற பெயரில் பணி மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டு இருப்பதாகக் கூறப்படுகிறது. இந்நிலையில், தற்காலிகப் பணியிட மாறுதல் என்பது ஆறு மாதம் வரை மட்டும் பணி செய்ய வேண்டும். அதற்கு தலைமை பொறியாளர் அனுமதி அளிக்க வேண்டும் என்ற விதிகளை மீறி கோவை மாநகர் வட்டம் உள்ளிட்ட பல வட்டங்களில் தலைமை பொறியாளர் உத்தரவினை மீறி செயல்பட்டு வருகின்றனர் என மின்வாரிய பணியாளர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

மேலும், பணி விடுப்பு செய்தவர்களின் பட்டியலையும் சென்னை தலைமை அலுவலகத்திற்கு அனுப்பாமல் அலட்சியப்படுத்தி வருவதாக அவர்கள் தெரிவிக்கின்றனர். சில பணியாளர்களை மட்டும் விடுவிப்பு செய்த நிலையில், தனக்கு வேண்டியவர்களை மட்டும் மின் வாரியத்தின் உத்தரவினை மீறி அதே அலுவலகத்தில் பணிபுரிய கோவை மாவட்ட பொறுப்பு அமைச்சர் சரத்குமார் தலையீடு இருப்பதாக பாதிக்கப்பட்ட பணியாளர்கள் குற்றம்சாட்டுகின்றனர். மாவட்ட பொறுப்பு அமைச்சரிடம் பணியாளர்கள் சிலர் தங்களை இதே அலுவலகத்தில் பணிபுரிய அனுமதிக்க வேண்டும் என கேட்டதாகவும், அதனால் அவர்களுக்கு அவர் சிபாரிசு செய்து இருப்பதாகவும் பாதிக்கப்பட்டவர்கள் கூறுகின்றனர்.

### அமைச்சரின் தலையீட்டை விசாரிக்க வேண்டும்!

இந்நிலையில், மின் வாரிய உத்தரவினை கடைப் பிடிக்காமல், அலட்சியம் காட்டும் மின்வாரிய அதிகாரிகள் மீது மின்துறை அமைச்சர் ஒழுங்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். மின் வாரிய உத்தரவின்படி அனைவரையும் விடுவிப்பு செய்து அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட அலுவலகத்தில் பணியில் சேர நடவடிக்கை எடுக்க வேண்டும். அல்லது பதவி உயர்வு பெற்றவர்களின் பதவி உயர்வை ரத்து செய்ய வேண்டும் என மின் பணியாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். தவிர, அமைச்சரின் தலையீடு தொடர்பாக விசாரிக்க வேண்டும் எனவும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

புதுச்சேரி மாநிலத்தில் சிறு, குறு தொழில் வளர்ச்சிக்கு

# வங்கிகள் அளித்துள்ள கடன்கள் குறித்து வெள்ளை அறிக்கை வெளியிடுக!

## புதுச்சேரி அரசை - தி.மு.க. அமைப்பாளர் இரா.சிவா வலியுறுத்தல்!




புதுச்சேரி, ஜூலை 7- இந்திய ரிசர்வ் வங்கியின் உத்தரவை மதிக்காமல் செயல்படும் இந்தியன் வங்கி அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும், சர்ஃபாசி சட்டத்தை வங்கி அதிகாரிகள் சட்டவிரோதமாக பயன்படுத்தி வாடிக்கையாளர்களின் சொத்துக்களை ஏலம் விட்டு கொள்ளை அடிப்பதைக் கண்டித்தும், சிறு, குறு தொழில்களை நசுக்கும் வங்கி நிர்வாகத்தை கண்டித்தும் அகில இந்திய வங்கி மற்றும் வங்கி சாரா வாடிக்கையாளர் நலன் மற்றும் பாதுகாப்பு நலச்சங்கம் சார்பில் புதுச்சேரி கொக்குப்பார்க் சந்திப்பில் இந்தியன் வங்கி மண்டல அலுவலகம் அருகில் நேற்று காலை கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்திற்கு சங்க ஒருங்கிணைப்பாளர் நடராஜன் தலைமை வகித்தார். தி.மு.க. மாணவர் அணி அமைப்பாளர் எஸ்.பி. மணிமாறன், தட்டாஞ்சாவடி தொகுதி பொறுப்பாளர் டாக்டர் ரோ. நித்திஷ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இதில், தி.மு.க. மாநில அமைப்பாளர் இரா. சிவா சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து பேசுகையில், வங்கிகள் மக்களின் பணத்தைப் பாதுகாக்க உருவாக்கப்பட்ட அமைப்புகளா, அல்லது மக்களிடம் பல்வேறு கட்டணங்களை வசூலித்து லாபம் ஈட்டும் நிறுவனங்களா என்ற கேள்வி இன்று எழுந்துள்ளது.

ஒரு சாதாரண மனிதர் வங்கியில் பணம் செலுத்தினாலும் கட்டணம், பணம் எடுத்தாலும் கட்டணம், குறைந்தபட்ச இருப்புத் தொகை இல்லாவிட்டாலும் கட்டணம், குறுஞ்செய்திக்கும் கட்டணம் என வாடிக்கையாளர்களின் மீது பல்வேறு பெயர்களில் சுமைகள் ஏற்றப்படுகின்றன. வங்கிகள் தங்களது கட்டண விவரங்களை வெளிப்படையாகவும் எளிதில் புரியும் வகையிலும் தெரிவிக்க வேண்டும்.

### அவமானப்படுத்தும் அணுகுமுறை!

பெரிய நிறுவனங்களின் கடன்களை வசூலிப்பதில் காட்டப்படாத வேகம், சிறு வியாபாரி, நடுத்தர குடும்பம், வீடு கட்ட கடன் வாங்கியவர், வாகனக் கடன் பெற்றவர் ஆகியோரிடம் மட்டும் காட்டப்படுவது ஏன்? ஒரு தவணை தாமதமானாலே சாதாரண மக்களுக்கு தொடர்ந்து தொலைபேசி அழைப்புகள், அழுத்தம், அவமானப்படுத்தும் அணுகுமுறை போன்ற புகார்கள் எழுகின்றன. கடன் வசூல் நடவடிக்கைகள் சட்டத்திற்கும் மனித கண்ணியத்திற்கும் உட்பட்டதாக இருக்க வேண்டும்.

சர்ஃபாசி சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும் போது, சிறு மற்றும் நடுத்தர கடனாளிகளின் வாழ்வாதாரம், தொழில் தொடர்ச்சி, குடும்ப சூழ்நிலை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு உரிய மறுசீரமைப்பு மற்றும் நியாயமான தீர்வு வாய்ப்புகள் உறுதி செய்யப்பட வேண்டும். சிறு தொழில்களைத் தொடங்குங்கள், இளைஞர்கள் தொழில்முனைவோராக மாறுங்கள் என்று அரசு கூறுகிறது. ஆனால் தொழிலில் ஒரு பின்னடைவு ஏற்பட்டவுடன் வங்கிகள் அவர்களை மீண்டும் எழ முடியாத நிலைக்குத் தள்ளினால், புதிய தொழில் முனைவோர் எப்படி உருவாக முடியும்? முத்ரா, ஸ்டார்ட்-அப் போன்ற திட்டங்கள் விளம்பரத்திற்கான வார்த்தைகளாக மட்டும் இருக்கக் கூடாது. சிறு தொழில்களுக்கு எளிய கடன், நியாயமான வட்டி, மறுசீரமைப்பு வாய்ப்பு மற்றும் தொழில் தோல்வியடைந்தால் மீண்டு வருவதற்கான பாதுகாப்பு ஆகியவை தேவை.

### வங்கி தொடர்பான அறிவிப்புகள் தமிழ்மொழியில் காட்சிப்படுத்த வேண்டும்!

வங்கி வாடிக்கையாளர்களின் புகார்கள் குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் தீர்க்கப்பட வேண்டும். வங்கிகள் மீது புகார் அளிக்கும் பொதுமக்கள் அலைக்கழிக்கப்படக் கூடாது. புகார் பதிவு செய்தவுடன் கண்காணிப்பு எண், தீர்வுக்கான காலக்கெடு, மேல்முறையீட்டு வழிமுறை ஆகியவை தெளிவாக வழங்கப்பட வேண்டும். வங்கி வாடிக்கையாளர்களின் உரிமைகள் தொடர்பான அறிவிப்புகள் தமிழ் உள்ளிட்ட மாநில மொழிகளில் அனைத்து வங்கிக் கிளைகளிலும் தெளிவாகக் காட்சிப்படுத்தப்பட வேண்டும்.

புதுச்சேரியில் கடந்த ஆண்டு அரசு நிகழ்ச்சியில் பங்கேற்ற ஒன்றிய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் புதுச்சேரியில் சிறு, குறு, நடுத்தர தொழில் வளர்ச்சிக்காக பல ஆயிரம் கோடி கடன் அளித்திருப்பதாகவும், அதன் மூலம் வேலை வாய்ப்பு பெருகி இருப்பதாகவும் தெரிவித்திருந்தார். அதன்படி, புதுச்சேரியில் உள்ள வங்கிகள் மூலம் எவ்வளவு சிறு, குறு தொழில்களுக்கு கடன் வழங்கப்பட்டுள்ளது என்பது குறித்தும், முத்ரா, ஸ்டார்ட்-அப் திட்டங்களில் எவ்வளவு பேருக்கு வங்கி கடனளித்திருக்கிது என்பது குறித்தும், ஏழை, எளிய மக்கள் சிறு கடன் பெற்றவர் அடங்கிய வெள்ளை அறிக்கை ஒன்றை புதுச்சேரி அரசு வெளியிட வேண்டும்.

### வாடிக்கையாளர்களின் பாதுகாப்பு முக்கியம்!

வங்கிகள் மக்களுக்காக இருக்க வேண்டும். மக்கள் வங்கிகளுக்காக வாழ வேண்டிய நிலை ஏற்படக் கூடாது. சேமிப்பாளரின் பணமும் பாதுகாக்கப்பட வேண்டும்; கடன் வாங்கியவரின் கண்ணியமும் பாதுகாக்கப்பட வேண்டும். சட்டம் வங்கிகளுக்கு மட்டும் கவசமாக இருக்கக் கூடாது. சாதாரண மக்களுக்கும் பாதுகாப்பாக இருக்க வேண்டும். வங்கி வாடிக்கையாளர்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் போராட்டத்தில் தி.மு.க. மக்கள் பக்கம் உறுதியாக நிற்கும்.

இவ்வாறு பேசினார்.

இந்தக் கண்டன ஆர்ப்பாட்டத்தில், தி.மு.க. பொதுக்குழு உறுப்பினர் இளம்பரிதி, தொகுதி செயலாளர்கள் நடராஜன், வடிவேல், தியாகராஜன், மகளிர் அணி அமைப்பாளர் காயத்ரி, அமைப்பு சாரா ஓட்டுநர் அணி அமைப்பாளர் மதிமாறன், நெசவாளர் அணி அமைப்பாளர் செந்தில்குமரன், மாநில துணை அமைப்பாளர்கள் சிவதாஸ், சிவா, உருளையன் பேட்டை தொகுதி பொருளாளர் சசிகுமார் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

நாடு முழுவதும்

# 58 பொறியியல் கல்லூரிகள் மூடல்!

## 950–க்கும் மேற்பட்ட பாடப்பிரிவுகளும் ரத்து!

புதுடெல்லி, ஜூலை 7 - நடப்பு 2025-26ஆம் கல்வி ஆண்டில் நாடு முழுவதும் 58 பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரிகள் மூடப்பட்டுள்ளதாக அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக் குழுமம் (ஏ.ஐ.சி.டி.இ.) தெரிவித்துள்ளது. மாணவர் சேர்க்கைக் குறைவு, உள்கட்டமைப்பு வசதியின்மை உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நாடு முழுவதும் மொத்தம் 58 பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரிகளை முறையாக மூடுவதற்கு நடப்பு கல்வி ஆண்டில் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. முறையான மூடல் என்பது, அனுமதி வழங்கப்பட்ட அந்த குறிப்பிட்ட கல்வி ஆண்டில் முதலாமாண்டு மாணவர் சேர்க்கையை அந்தக் கல்வி நிறுவனங்கள் நடத்தக் கூடாது என்பதாகும். அதே நேரத்தில், அங்கு ஏற்கனவே படித்து வரும் பிற ஆண்டு மாணவர்கள் தங்களது படிப்பைத் தொடரவும், பட்டங்களைப் பெறவும் எவ்வித தடையும் இருக்காது.

மூடப்பட்ட 58 கல்வி நிறுவனங்களில், அதிகபட்சமாக உத்தர பிரதேசம் மற்றும் மகாராஷ்டிரா மாநிலங்களில் தலா 12 கல்லூரிகள் மூடப்பட்டுள்ளன.

இதற்கு அடுத்தபடியாக மத்திய பிரதேசத்தில் 8 கல்லூரிகளும், தெலங்கானா மற்றும் பஞ்சாபில் தலா 4 கல்லூரிகளும் மூடப்பட்டு உள்ளன.

ஆந்திர பிரதேசம் மற்றும் ராஜஸ்தானில் தலா 3 கல்லூரிகளும்; குஜராத், கர்நாடகா, தமிழ் நாடு ஆகிய மாநிலங்களில் தலா 2 கல்லூரிகளும் மூடப்பட்டுள்ளன. ஹரியானா, ஒடிசா, உத்தராகண்ட் மற்றும் மேற்கு வங்கம் ஆகிய மாநிலங்களில் தலா ஒரு கல்லூரி மூடப்பட்டுள்ளது.

இந்த 58 நிறுவனங்களில், 3 கல்லூரிகள் அரசு உதவி பெறும் கல்வி நிறுவனங்கள் ஆகும். மீதமுள்ளவை அனைத்தும் தனியார் சுயநிதி கல்லூரிகள் ஆகும். மேலும், இதே காலகட்டத்தில் நாடு முழுவதும் உள்ள தொழில்நுட்பக் கல்லூரிகளில் வழங்கப்பட்டு வந்த 950க்கும் மேற்பட்ட பாடப்பிரிவுகளும் ரத்து செய்யப்பட்டுள்ளது.



காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட அவைத் தலைவர் மறைந்த ஜி.சுகுமார் என்கிற சுப்பிரமணியன் அவர்களின் 6–ம் ஆண்டு நினைவு தினத்தையொட்டி அவருடைய இல்லத்தில் திருவுருவப்படத்திற்கு காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சி.வி.எம்.பி. எழிலரசன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். உடன் தலைமை செயற்குழு உறுப்பினர் எம்.எஸ்.சுகுமார், மாநில வர்த்தக அணி துணை செயலாளர் வி.எஸ்.ராமகிருஷ்ணன், ஒன்றிய குழு பெருந்தலைவர் ஆர்.கே.தேவேந்திரன், ஒன்றிய செயலாளர்கள் பி.சேகர், பி.எம்.குமார், க.குமணன், பகுதி செயலாளர்ள் எஸ்.சந்துரு, சு.வெங்கடேசன், மாவட்ட இளைஞரணி நிர்வாகிகள் அ.யுவராஜ், டி.சஞ்சய் காந்தி, மாவட்ட வழக்கறிஞர் அணி இ.எல்.கண்ணன், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி எஸ்.அரவிந்தகுமார், எஸ்.அண்ணாதுரை, ஒன்றிய கழக நிர்வாகிகள் எஸ்.சுந்தரமூர்த்தி, எம்.சண்முகம், வாலாஜாபாத் தெற்கு ஒன்றிய இளைஞரணி வி.குமரன், எஸ்.எஸ்.கே.சத்யா, தியாகராஜன், கார்த்தி உள்ளிட்ட கழக நிர்வாகிகள் குடும்பத்தினர் உடன் இருந்தனர்.

# இல்லாத மருத்துவமனைக்கு 87 பேர் பணி நியமனம்!

இந்தூர், ஜூலை 7– தமிழ்நாட்டில் எய்ம்ஸ் மருத்துவமனை கட்டப்படும் என்று ஒன்றிய அரசு அறிவித்த நிலையில், அதன் கட்டுமானப்பணிகள் இதுவரை முடியவில்லை. இதேபோல், மத்திய பிரதேசம் இந்தூரில் 100 படுக்கை கொண்ட நவீன அரசு மருத்துவமனை கட்டப்படுவதாக அறிவிக்கப்பட்டது. ஆனால், இன்று வரை ஒரு எந்த கட்டுமானமும் நடைபெறவில்லை. இருப்பினும், அரசு ஆவணங்களில் அந்த மருத்துவமனை செயல்படுவதுபோல் எழுதப்பட்டுள்ளது. மேலும், இல்லாத மருத்துவமனைக்கு, மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் இதர பணியாளர்கள் என மொத்தம் 87 பேருக்கு பணிநியமனங்கள் வழங்கப்பட்டது அம்பலமாகியுள்ளது.

மருத்துவமனை செயல்பாட்டில் இல்லாத நிலையில், அந்த 87 பேரும் படிப்படியாக வேறு அரசு மருத்துவமனைகளுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். இந்த மோசடி விவகாரம் மத்திய பிரதேசத்தில் தற்போது பூதாகரமாக வெடித்துள்ளது.

# இது உண்மையா குமாரு?

